2899

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2016)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2014 (2016)

**(02) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள்**


Social, Economic, Political background and Trends in Sri Lanka

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**I 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கே எழுதவும்.**

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

✳ இவ்வினாத்தாள் **பகுதி I பகுதி II** ஆகிய இரு பகுதிகளை **6** பக்கங்களில் **40** வினாக்களையும் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுத முன்னர் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும் பகுதி II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 8 | |
| 3 | 9 - 18 | |
| 4 | 19 - 30 | |
| 5 | 31 - 33 | |
| 6 | 34 - 40 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

34. 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டப் பிரேரணையின் மூலம் இந்நாட்டின் சுகாதார சேவைக்காக மொத்த தேசிய உற்பத்தியின் 3% சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(i) சுகதேகியான மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்காக இன்று இந்நாட்டு சுகாதார சேவை வெற்றி கொள்ள வேண்டிய பிரதான **இரண்டு** சவால்களும் எவை?

(அ) ............................................................

(ஆ) ............................................................

(ii) இலங்கையின் சுகாதாரத் துறை தெற்காசியாவின் வேறு நாடுகளுக்குச் சார்பாக மிக உயர்ந்த மட்டத்தில் நிலவுவதற்கு **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ............................................................

(ஆ) ............................................................

(iii) அண்மையில் சுகாதார துறையில் இலங்கையினால் அடைய முடிந்த புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ............................................................

(ஆ) ............................................................

35. இன்று பெரும்பாலான அரசியல் விமர்சகர்கள் நிருவாகம் தொடர்பான நான்காம் இயக்க சக்தியாக வெகுசன ஊடகங்களை அறிமுகஞ் செய்ய முனைகின்றனர்.

(i) சனநாயக நிருவாக முறையொன்றைத் தாபிப்பதில் வெகுசன ஊடகங்களுக்குள்ள பொறுப்புக்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ............................................................

(ஆ) ............................................................

(ii) சமூக மற்றும் அரசியல் நிலவுகையைச் சவாலுக்கு உட்படுத்தும் சாத்தியம், அச்சு ஊடகங்களினை விட இலத்திரனியல் ஊடகங்களுக்கு மிக உயர்மட்டத்தில் இருப்பதற்கு ஏதுவாகும் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ............................................................

(ஆ) ............................................................

(iii) அண்மையில் அரசினால் முன்வைக்கப்பட்ட தகவல் அறிவதற்கான உரிமைகள் பற்றிய சட்டத்தின் மூலம் வெகுசன ஊடகங்கள் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ............................................................

(ஆ) ............................................................

*(06 x 5 = 30 புள்ளிகள்)*

## பகுதி II

- **36** தொடக்கம் **40** வரை ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத் உமக்குத் தரப்படும் தாள்களில்** எழுதுக.

36. இலங்கையில் தொழினுட்பவியல் மற்றும் தொழிற்பயிற்சி துறைகளின் துரித அபிவிருத்திக்காக அரசினால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் **நான்கை** விவரிக்க. *(08 புள்ளிகள்)*

37. இலங்கையின் பொருளாதாரத்தின் உழைப்பின் கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றுக்கு இடையில் சமநிலையை ஏற்படுத்துவதற்காக இந்நாட்டின் கல்வித் தொகுதியினுள் செயற்படுத்தக்கூடிய நவீனமயப்படுத்தல் முயற்சிகள் **நான்கை** விளக்குக. *(08 புள்ளிகள்)*

38. இலங்கையின் துரித பொருளாதார அபிவிருத்திக்காக அரசசேவையின் வினைத்திறனையும் விளைதிறனையும் உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்ல உதவும் **நான்கு** நடைமுறைகளைக் காரணங் கூறி விவரிக்க. *(08 புள்ளிகள்)*

39. இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவருவது தொடர்பில் இலங்கை வெளிநாட்டுக் கொள்கையின் செல்வாக்கை பிரதான இயல்புகள் **நான்கின்** அடிப்படையில் விளக்குக. *(08 புள்ளிகள்)*

40. சூழல் காப்பிற்காக இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட **நான்கு** செயற்பாடுகளை விமர்சன ரீதியாக ஆராய்க. *(08 புள்ளிகள்)*

※ ※ ※

9. இலங்கைக்கு வருகை தந்த **முதலாவது** நாடுகாண் பயணி யார்?
   (1) ஹியூங் சான் (2) மார்கோபோலோ
   (3) இபன்பதூதா (4) பாஹியன் (………)

10. உமா ஓயா செயற்றிட்டத்திற்கு உதவி வழங்கும் வெளிநாடு எது?
   (1) ஈரான் (2) சவுதி அரேபியா
   (3) குவைத் (4) ஓமான் (………)

11. இலங்கை மத்திய வங்கியின் **முதலாவது** பிரதேச அலுவலகம் பின்வரும் எந்த நகரத்தில் திறக்கப்பட்டது?
   (1) நுவரெலியா (2) மாத்தறை
   (3) மாத்தளை (4) யாழ்ப்பாணம் (………)

12. இலங்கை பிரசைகளுக்குப் பின்வரும் எந்த அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் முதன்முதலாக சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது?
   (1) கோல்புருக் (2) மனிங்
   (3) டொனமோர் (4) சோல்பரி (………)

13. பின்வருவனவற்றில் தற்போது இலங்கையின் பணவீக்கத்தை அளவிடப் பயன்படுத்தும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற வருடம் எது?
   (1) 2006 / 2007 (2) 2008 / 2009
   (3) 2009 / 2010 (4) 2010 / 2011 (………)

14. பின்வருவனவற்றில் எதற்கு இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கலை நடைமுறைப்படுத்த இலங்கை மத்திய வங்கியினால் சட்ட ரீதியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது?
   (1) உத்தரவு பெற்ற நிறுவனங்கள்
   (2) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
   (3) உத்தரவு பெற்ற பெற்ற வணிக வங்கிகள்
   (4) விசேட குத்தகை நிதி நிறுவனங்கள் (………)

15. பின்வருவனவற்றில் **பொருந்தமற்ற** சோடி எது?
   (1) டி.ஜே.விமலசுரேந்திர - நீர் மின்சாரம்
   (2) டி.பீ.றம்பால - புகையிரதப் போக்குவரத்து
   (3) றல்ப் தெரணியகல - வரலாறு
   (4) சேர் நிகலஸ் ஆட்டிகல - மருத்துவம் (………)

16. 2016 ஆம் வருடத்தில் ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையினால் அதிக எண்ணிக்கையிலான தங்கப் பதக்கங்கள் வென்றெடுக்கப்பட்ட விளையாட்டுத்துறை எது?
   (1) பாரந்தூக்குதல் (2) உயரம் பாய்தல்
   (3) நீச்சல் (4) மரதன் ஓட்டம் (………)

17. பின்வருவனவற்றில் இலங்கையில் பயன்படுத்தும் மீளப்புதுப்பிக்கத்தக்க ஒரு ஆரம்ப சக்தி உற்பத்தி முதல் **அல்லாதது** எது?
   (1) உயிர்ச்சுவட்டு எரிபொருள் (2) சூரிய சக்தி
   (3) உயிர்த் திணிவு (4) நீரின் அழுத்த சக்தி (………)

18. இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக பெண் ஒருவர் அமைச்சரவை அமைச்சராக நியமனம் பெற்ற ஆண்டு எது?
   (1) 1952 (2) 1956 (3) 1960 (4) 1970 (………)

[பக் 4 ஐப் பார்க்க.

2899

19. க.பொ.த (உயர்தர)ப் பரீட்சைக்கு அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழினுட்பப் பாடநெறியில் வெற்றிகரமாகச் சித்தியடையும் ஒரு மாணவனுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள **அதியுயர்** தேசிய தொழிற்றகைமை (NVQ) மட்டம் எது?

(1) முதலாவது (2) இரண்டாவது
(3) மூன்றாவது (4) நான்காவது (………)

20. பின்வரும் எந்த வெளிநாட்டவரால் இலங்கையின் கலாச்சாரத்தில் உணவு குடிபானங்கள், ஆடை ஆபரணங்கள், சங்கீத முறைகள், வீட்டுத் தளபாடங்கள், நபரின் பெயர்கள் ஆகியன **அதிகமாக** அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) அராபியர் (2) போர்த்துக்கேயர்
(3) ஒல்லாந்தர் (4) பிரித்தானியர் (………)

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

● **21** தொடக்கம் **30** வரை ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. ஐக்கிய நாடுகளின் சர்வதேச நீதிமன்றத்தில் உப தலைவராகச் செயலாற்றிய இலங்கையின் கீர்த்திமிக்க சட்டத்தரணி யார்?

………………………………………………………………………………………………

22. இலங்கையின் **முதலாவது** பல்நோக்கு நீர்பாசனத் திட்டம் எது?

………………………………………………………………………………………………

23. தற்போது, இலங்கைப் பெண்ணொருவரால் சட்டபூர்வமாக திருமணம் செய்யக் கூடிய **ஆகக் குறைந்த** வயது யாது?

………………………………………………………………………………………………

24. இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கு டிப்ளோமா, பட்டம் மற்றும் பட்டமேல் பட்டங்கள் போன்றவற்றை வழங்கும் பல்கலைக்கழகம் **அல்லாத** நிறுவனம் எது?

………………………………………………………………………………………………

25. 2015 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் அமெரிக்க டொலருக்கு ஒன்றிற்குச் சார்பாக ரூபாயின் பெறுமதியைச் சந்தைக் கேள்வி மற்றும் வழங்கல் அடிப்படையில் தீர்மானிக்க எந்த மாதத்தில் இருந்து இடமளிக்கப்பட்டது?

………………………………………………………………………………………………

26. இலங்கை தேசிய நனோ தொழினுட்ப ஆராய்ச்சி நிறுவனம் அமைத்துள்ள பிரதேசம் எது?

………………………………………………………………………………………………

27. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்போதைய அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்றில் அமைச்சரவையில் இருக்க வேண்டிய முதலமைச்சர் உட்பட மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

………………………………………………………………………………………………

28. தற்போது இலங்கையில் செயற்படுகின்ற **பிரதான** சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டம் எது?

………………………………………………………………………………………………

29. அண்மையில் இலங்கை அரசினால் பாவனை மட்டுப்படுத்தப்பட்ட MSG என அழைக்கப்படும் சுவையூட்டியின் விஞ்ஞானப் பெயர் என்ன?

………………………………………………………………………………………………

30. சிங்கராஜ வன ஒதுக்கத்தைத் **தவிர,** இலங்கையில் மிகப் பெரிய பாதுகாப்பு வனம் அமைந்துள்ள மாவட்டம் எது?

………………………………………………………………………………………………

*(01 × 10 = 10 புள்ளிகள்)*

[பக் 5 ஐப் பார்க்க.

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. இலங்கை அரசின் மூலம் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன.

(i) புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக இலங்கை அரசினால் அண்மையில் எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(ii) புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிக்கும்போது அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டிய பிரதான அரசியல் மற்றும் சமூகத் துறைகள் **இரண்டும்** யாவை?

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(iii) இலங்கை அரசினால் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட செல்வாக்குச் செலுத்திய பிரதான **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

32. தற்காலத்தில் பெண்களைப் பொருளாதார மற்றும் சமூகரீதியில் வலுவூட்ட வேண்டுமென்பதற்கான பரந்த அடிப்படையிலான சமூக உரையாடல் உருவாகி வருகின்றது.

(i) பெண்களை பொருளாதார மற்றும் சமூகரீதியில் வலுவூட்டல் தற்காலத்தில் முக்கியத்துவம் பெறுவதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(ii) ஏற்கனவே பெண்களை பொருளாதார மற்றும் சமூகரீதியில் வலுவூட்டுவதற்காக அரசினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(iii) பெண்களைப் பொருளாதார மற்றும் சமூகரீதியில் வலுவூட்டும்போது முகங்கொடுக்க நேரிடுகின்ற **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

33. இந்நாட்டின் அபிவிருத்திக்கு அரசியல் ஸ்திரத்தன்மை போன்றே இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன.

(i) இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள பயன்மிக்க நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(ii) இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்போது அரசாங்கத்திற்கு முகங் கொடுக்க நேரிடக்கூடிய சவால்களுடனான **இரண்டு** துறைகளைக் குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

(iii) இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் சர்வதேச ரீதியில் எமது நாட்டினால் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................

(ஆ) ..........................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

## பகுதி I

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்து அத் தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரிலுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்களில் இலங்கை சிவில் சேவைக்கென, ஆட்சேர்க்கப்பட்ட முதலாவது இலங்கையர் யார்?
   (1) சேர். பொன்னம்பலம் அருணாசலம் (2) திரு.ரீ.பி. ஜாயா
   (3) சேர். டி.பி.ஜயதிலக (4) திரு.ஈ.டபிள்யூ. பெரேரா (.........)

2. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கமைய நிறுவப்பட்ட பின்வரும் சுயாதீன ஆணைக்குழுக்களில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறத் **தேவையற்ற** ஆணைக்குழு எது?
   (1) தேசிய பெறுகை ஆணைக்குழு
   (2) இலஞ்சம் அல்லது மோசடி பற்றிய சாந்துரைகளைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு
   (3) தேர்தல் ஆணைக்குழு
   (4) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (.........)

3. நான்காவது பரம்பரை (4G) இணைய வசதிகளினால் முழுத் தீவையும் உள்ளடக்கும் "கூகள் லூன (Google Loon)" செயற்திட்டத்தின் இலங்கைத் தரப்பினராகப் பங்களிக்கும் நிறுவனம் பின்வருவனவற்றுள் எது?
   (1) இலங்கை ரெலிகொம் கம்பனி
   (2) இலங்கைத் தொலைத் தொடர்புகளைக் கட்டுப்படுத்தும் ஆணைக்குழு
   (3) இலங்கை தகவல் தொழினுட்பத் தொடர்பாடல் பிரதிநிதித்துவ நிறுவனம்
   (4) கொழும்பு பல்கலைக்கழகக் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பீடம் (.........)

4. 'மத்தியகால சிங்கள கலைகள் (Medieval Sinhalese Arts)' என்ற பிரபல நூலை எழுதியவர் யார்?
   (1) பேராசிரியர் செனரத் பரணவிதான (2) பேராசிரியர் குணபால மலலசேகர
   (3) கலாநிதி நந்ததேவ விஜேசேகர (4) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (.........)

5. பின்வருவனவற்றுள் கொழும்பு பங்குச் சந்தையில் செயலாற்றுகை பகுப்பாய்வுக்கெனப் பயன்படுத்தப்படும் சுட்டெண் யாது?
   (1) வாழ்கைச் செலவுச் சுட்டெண் (2) மிலங்கா சுட்டெண்
   (3) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (4) தனி நபர் வருமானச் சுட்டெண் (.........)

6. தற்போதைய இலங்கையில் கூடிய சனத்தொகை கொண்ட **ஐந்து** மாகாணங்களை **இறங்குவரிசையில்** சரியாகக் கொண்டுள்ள விடை பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   (1) மேல், மத்திய, தென், வடமேல், சப்ரகமுவ
   (2) மேல், தென், சப்ரகமுவ, வடமேல், மத்திய
   (3) மேல், தென், வடமேல், சப்ரகமுவ, மத்திய
   (4) மேல், மத்திய, தென், சப்ரகமுவ, வடமேல் (.........)

7. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA) நிருவகிக்கப்படுவது, பின்வரும் எந்த அமைச்சின் கீழாகும்?
   (1) உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
   (2) தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு
   (3) தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சிகள் அமைச்சு
   (4) தொழிலாளர் மற்றும் தொழிலாளர் தொடர்பு அமைச்சு (.........)

8. நீதிமன்றத்தின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்காக தற்போதைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் **அல்லாதது** பின்வருவனவற்றில் எது?
   (1) ஜனாதிபதியின் சுய விருப்பின் அடிப்படையில் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளை அகற்ற முடியாதிருத்தல்
   (2) நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமித்தல்
   (3) நீதிபதிகள் தனது பதவியிலிருந்து ஆற்றும் கடமைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியாதிருத்தல்
   (4) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்களை ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து செலுத்துதல். (.........)

[பக் 3 ஐப் பார்க்க.

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2900

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2016)

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2014 (2016)

## (03) சர்வதேச போக்குகள்
## Global Trends

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

மிக முக்கியம் :

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கே எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகிறேன்.

....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம் :

✳ இவ்வினாத்தாள், **பகுதி I, பகுதி II** ஆகிய பகுதிகளையும் **6** பக்கங்களில் **40** வினாக்களையும் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுத முன்னர் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ பகுதி **I இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும் பகுதி II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 12 | |
| 3 | 13 - 25 | |
| 4 | 26 - 32 | |
| 5 | 33 - 35 | |
| 6 | 36 - 40 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி II

- **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் சரியான **விடையைத் தரப்பட்ட தாள்களில்** எழுதுக.

36. தற்காலத்தில் சார்க் ஒழுங்கமைப்பிலுள்ள நாடுகள் எதிர்நோக்கும் பொதுவான அரசியல், பொருளாதார பிரச்சினைகள் **நான்கைப்** பரிசீலிக்குக. *(08 புள்ளிகள்)*

37. தற்காலத்தில் தேசிய கீதம் மட்டுமின்றி உலக கீதமும் மானுட சமூகத்துக்குத் தேவையாகின்றது. அவ்வாறானதொரு உலக கீதத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் **நான்கை** விளக்குக. *(08 புள்ளிகள்)*

38. தற்கால மனிதன் உற்பத்தி மற்றும் நுகர்வுப் பொறியாக மாறியுள்ளான்.
இந்நிலைமையைக் **குறைப்பதற்கான** தீர்வுகள் **நான்கை** விளக்குக. *(08 புள்ளிகள்)*

39. உலகிலுள்ள சில செல்வந்த நாடுகள் விண்வெளி ஆய்வுகளுக்கு அதிகளவான பணத்தைச் செலவிடுகின்றன.
இந்த நிலைமைக்குச் **சார்பாகவோ** அல்லது **எதிராகவோ** உமது கருத்தை **நான்கு** விடயங்களினூடாக காரணத்துடன் ஆராய்க. *(08 புள்ளிகள்)*

40. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தினூடாக பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் ஆகியவற்றின் அபிவிருத்திக்கென மேற்கொள்ளப்படும் பணிகளை **நான்கு** விடயங்களின் அடிப்படையில் விளக்குக. *(08 புள்ளிகள்)*

❊ ❊ ❊

33. உலக நாகரிகத்தின் ஆரம்பகாலந்தொட்டு, ஆட்புல ஒருமைப்பாடு (territorial integrity) சார்ந்ததாகவே யுத்தங்கள் உருவானதாகக் கருதப்படுகின்றது.

(i) ஆட்புல ஒருமைப்பாடு எனும் எண்ணக்கருவை விளக்கும் வரைவிலக்கணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(ii) தற்காலத்தில், ஆட்புல ஒருமைப்பாட்டுக்கென, அடிக்கடி சச்சரவுகளில் ஈடுபடும் ஆசிய நாடுகள் **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(iii) எதிர்காலத்தில் ஆட்புல ஒருமைப்பாடு பற்றிய எண்ணக்கரு அற்றுப்போவதற்குக் காரணமாக அமையத்தக்க விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

34. நடப்பு தசாப்தத்தில், மனிதர் எதிர்நோக்கும் பாரிய நெருக்கடி பூகோள வெப்பமடைதல் ஆகும்.

(i) பூகோள வெப்பமடைதலில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(ii) பூகோள வெப்பமடைதலினால் ஏற்படும் **பிரதிகூலமான** விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(iii) பூகோள வெப்பமடைதலைக் குறைப்பதற்கென சர்வதேசரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

35. 'மனிதன் விஞ்ஞான மற்றும் கலைத்துவ ஆக்கங்களை மேற்கொள்வதற்கான அறிவைக் கொண்டிருந்தான். ஆகவே, அவர்களால் சமாதானமானதும் நியாயபூர்வமானதும் சகோதரத்தன்மை கொண்டதுமான உலகை நிருமாணிக்க இயலாதுள்ளதா' - லியோன் ப்ளௌம்

(i) அமைதியான உலகை நிருமாணிக்கும் பணியின் போது மனித வர்த்தகத்துக்குச் சவாலாக அமையும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(ii) கலைகளைக் கற்பதனால் பெற்றுக் கொள்ளத்தக்க பண்புகள் **இரண்டைத்** தருக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(iii) எதிர்காலத்தில் மிகவும் மனிதாபிமானம் கொண்டதான உலகை உருவாக்கத் தேவையான ஆலோசனைகள் **இரண்டைச்** சமர்ப்பிக்க.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

*(06 x 5 = 30 புள்ளிகள்)*

[ பக் 6 ஐப் பார்க்க.

## பகுதி I

- **1** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளின் தொடக்க ஆண்டும் முடிவு ஆண்டும் முறையே யாவை?
   (1) 2000, 2012 (2) 2000, 2013 (3) 2000, 2014 (4) 2000, 2015 (.........)

2. பின்வருவனவற்றுள், அண்மைக் காலந்தொட்டு நீலப்புரட்சியை (Blue Revolution) ஆரம்பித்துள்ள நாடு யாது?
   (1) சீனா (2) ஜப்பான் (3) இந்தியா (4) தென் கொரியா (.........)

3. பின்வருவனவற்றுள், சனத்தொகை படிப்படியாகக் குறைவடையும் ஆசிய நாடு எது?
   (1) ஜப்பான் (2) வட கொரியா (3) சிங்கப்பூர் (4) தென் கொரியா (.........)

4. தற்போது, முதன்முதலாக ஐக்கிய இராச்சியத்தில் வர்த்தகரீதியில் வெற்றிகரமாகத் தேயிலைச் செய்கையை ஆரம்பிக்கப்பட்டது, பின்வருவனவற்றுள் எங்காகும்?
   (1) அயர்லாந்து (2) இங்கிலாந்து (3) ஸ்கொட்லாந்து (4) வேல்ஸ் (.........)

5. புவியிலிருந்து சூரியனுக்கான சராசரியான தூரம் கிலோ மீற்றரில் எவ்வளவு?
   (1) 100 மில்லியன் (2) 150 மில்லியன் (3) 200 மில்லியன் (4) 250 மில்லியன் (.........)

6. பின்வருவனவற்றுள், வருமானவரி **செலுத்தாத** மக்களை கொண்டுள்ள அதிக நாடுகள் அடங்கிய விடை எது?
   (1) மொனாக்கோ, பேர்மூடா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத்
   (2) மொனாக்கோ, பேர்மூடா, ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து
   (3) மொனாக்கோ, பேர்மூடா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தோனேசியா
   (4) மொனாக்கோ, பேர்மூடா, குவைத், எகிப்து (.........)

7. பின்வருவனவற்றுள், இரண்டு இனக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எட்டு இலட்சத்திற்கும் அதிக குடிமக்கள் படுகொலை செய்யப்பட்ட நாடு எது?
   (1) ருவண்டா (2) சூடான் (3) லிபியா (4) நைஜீரியா (.........)

8. "மட்டற்ற அதிகாரம் அதிக மோசடிக்குக் காரணமாக அமையும் (Absolute power corrupts absolutely)" எனும் பிரபல்யமான கூற்றைக் கூறியவர் யார்?
   (1) நெல்சன் மண்டேலா (2) ஆபிரகாம் லிங்கன்
   (3) மகாத்மா காந்தி (4) அக்டன் பிரபு (.........)

9. உலகில் அதிகளவில் கோப்பியை உற்பத்தி செய்யும் நாடு இவற்றுள் எது?
   (1) இந்தியா (2) மெக்சிக்கோ
   (3) கானா (4) பிரேசில் (.........)

10. மின்னஞ்சலில், BCC எனும் குறுகிய பதம் பின்வரும் எப் பிரயோகத்திற்கெனப் பயன்படுத்தப்படுகிறது?
    (1) Blank Carbon Copy (2) Bulk Carbon Copy
    (3) Blind Carbon Copy (4) Back Carbon Copy (.........)

11. உலகில் மிகை செல்வந்தர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட நாடு யாது?
    (1) ஜப்பான் (2) ஐக்கிய அமெரிக்கா
    (3) ஜேர்மனி (4) சீனா (.........)

12. வருடாந்தம், உலக சுற்றாடல் தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?
    (1) ஏப்ரல் 5 (2) மே 5 (3) யூன் 5 (4) யூலை 5 (.........)

13. பின்வருவனவற்றுள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் **அடங்காதது** எது?

(1) ஆயுள் எதிர்பார்ப்பு (2) வருமானம்
(3) மனித உரிமைகள் (4) கல்வி (.........)

14. விஞ்ஞான முறையை (Scientific method) உலகிற்கு அறிமுகஞ் செய்த விஞ்ஞானி யார்?

(1) நிக்கலஸ் கொப்பர் நிகஸ் (2) கலிலியோ கலிலி
(3) ஐசெக் நியூற்றன் (4) அல்பேட் அயின்ஸ்ரைன் (.........)

15. 'அபு சாயிப் (Abu Sayyaif)' எனும் போராளிக் குழுவிற்கு உரித்தான நாடு?

(1) பிலிப்பைன்ஸ் (2) லெபனான் (3) கொலம்பியா (4) ஸ்பெயின் (.........)

16. யுத்தம் உருவாகுவது மனித மனங்களிலாகும். ஆகவே, அனைவரும் மனித மனங்களிலேயே பாசறை அமைக்க வேண்டும். (Wars beign in the minds of men and the defences of peace must be constructed in the minds of men)' எனும் கூற்று குறிப்பிடப்படும் ஐக்கிய நாடுகள் முகவரகத்தின் பெயர் யாது?

(1) UNDP (2) UNESCO (3) UNICEF (4) UNHCR (.........)

17. உலகப் பிரசித்திபெற்ற Time சஞ்சிகைக்கு அமைய, 2015 ஆம் ஆண்டின் தலைசிறந்த நபர் (Person of the year 2015) குறிப்படப்படுபவர் இவர்களுள் யார்?

(1) டேவிட் கெமரூன் (2) விளாடிமீர் புட்டின் (3) அன்ஜலோ மேர்க்கல் (4) நரேந்திர மோடி (.........)

18. பின்வருவனவற்றுள், அணுக் கருச்சக்தி உருவாக்கத்திற்குத் தேவையான மூலகம் யாது?

(1) றேடியம் (2) தோரியம் (3) யுரேனியம் (4) தைத்தேனியம் (.........)

19. தற்போது, ஐரோப்பிய சமூகத்திலிருந்து விலக எதிர்பார்க்கும் நாடு இவற்றுள் எது?

(1) பெரிய பிரித்தானியா (2) சுவிற்சர்லாந்து (3) பெல்ஜியம் (4) டென்மார்க் (.........)

20. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சோடி யாது?

(1) ஷெரினா வில்லியம்ஸ் - விளையாட்டு (2) டெஸ்மன் டூட்டு - விஞ்ஞானம்
(3) அருந்ததி ரோய் - இலக்கியம் (4) கலீடா ஷியா - அரசியல் (.........)

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

- **21** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாக்குமுரிய சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிகோட்டின் மீது** எழுதுக.

21. 'இராணுவம் முன்னணியில்' எனும் கொள்கையைக் கடைபிடிக்கும் ஆசிய நாடு எது?

..........................................................................................................................

22. சார்க் வலயப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ள தலைநகரம் எது?

..........................................................................................................................

23. இஸ்ரேல் நாட்டின் அரசகரும மொழி யாது?

..........................................................................................................................

24. பொதுநலவாய நாடுகளில் எழுத்துமூல அரசியலமைப்பைக் **கொண்டிராத** நாடு யாது?

..........................................................................................................................

25. வேத - உபநிடத காலத்தில் நிலவிய, மரபுரீதியான குருகுல ஆச்சிரமத்தின் அடிப்படையில் உருவாகிய நவீன இந்தியக் கல்வி நிறுவனம் யாது?

..........................................................................................................................

[ பக் 4 ஐப் பார்க்க.

2900

26. ஷின்ஹுஆ செய்திச் சேவை எந்த நாட்டுக்கு உரியதாகும்?

.............................................................................................................................

27. சர்வதேச பொலிஸ் எப் பெயர் கொண்டு அழைக்கப்படும்?

.............................................................................................................................

28. வறியோருக்கான வங்கி முறைமையை ஆரம்பித்த உலகின் பிரபல்யமான பொருளியலாளர் யார்?

.............................................................................................................................

29. விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் செய்மதி எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?

.............................................................................................................................

30. அணிசேரா நாடுகள் அமைப்பின் ஆரம்ப காலத் தலைவர் யார்?

.............................................................................................................................

*(01 × 10 = 10 புள்ளிகள்)*

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான **விடையைத்** தரப்பட்ட **புள்ளிகோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. அரசு எப்போதும் ஒழுகலாறு கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமாகும்.

(i) ஒழுகலாறு எனும் எண்ணக்கருவை விளக்கும் வரைவிலக்கணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) .............................................................................................................

(ஆ) .............................................................................................................

(ii) அரசொன்று ஒழுகலாறு கொண்டதாக இருப்பதனால் கிடைக்கத்தக்க அனுகூலமான பெறுபேறுகள் **இரண்டு** தருக.

(அ) .............................................................................................................

(ஆ) .............................................................................................................

(iii) அரசொன்று ஒழுகலாறு கொண்டதாக **அமையாதவிடத்து** ஏற்படத்தக்க **பிரதிகூலமான** விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) .............................................................................................................

(ஆ) .............................................................................................................

32. தற்போது, உலகில் நீர்ப்பற்றாக்குறை தீவிரமான நிலையை அடைந்துள்ளது.

(i) (அ) புவியின் மீது உள்ள உவர்நீரின் சதவீதம் எவ்வளவாகும்?

.............................................................................................................

(ஆ) புவியின் மீது உள்ள நன்னீரின் சதவீதம் எவ்வளவாகும்?

.............................................................................................................

(ii) தற்போதைய நீர்ப்பற்றாக்குறை காரணமாக, அதிகளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் ஆசிய நாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) .............................................................................................................

(ஆ) .............................................................................................................

(iii) உலகிலுள்ள நீரப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு, மேற்கொள்ளக்கூடிய தீர்வுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) .............................................................................................................

(ஆ) .............................................................................................................

[ பக் 5 ஐப் பார்க்க.

2[illegible]99

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2014 (2016)

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2014 (2016)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

## (04) முகாமைத்துவ விவேகம்
## Aptitude for Management

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்**



❊ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம், ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

❊ இவ்வினாத்தாள் I, II ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் **11** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டதாகும்.

❊ விடைகளை எழுத முன்னர் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

❊ பகுதி I க்குரிய **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலும்** பகுதி II க்குரிய விடைகளை **தரப்படும் தாள்களிலும்** எழுதுக.

❊ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.

❊ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

❊ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

❊ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

❊ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

❊ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை எடுத்தல் என்பன குற்றமாகும்.

❊ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 3 | |
| 3 | 4 - 8 | |
| 4 | 9 - 12 | |
| 5 | 13 - 16 | |
| 6 | 17 - 20 | |
| 7 | 21 - 30 | |
| 8 | 31 - 35 | |
| 9 | 36 - 40 | |
| 10 | 41 - 45 | |
| 11 | 46 - 50 | |
| **மொத்தம்** | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான வினாக்கள், பின்வரும் நிகழ்வை / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

சிறுவர் அபிவிருத்தித் திணைக்களத்தின், பிள்ளை அபிவிருத்தி நிலைய நிருவாகியாக, திருமதி வினிதா சிறிவர்தன கடமையாற்றுகிறார். இவரைத் தவிர மேலும் எட்டு போதனாசிரியைகள் அந்த நிலையத்தில் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றுகின்றனர். இந்தப் போதனாசிரியைகளுள் இருவர் மட்டும் இந்த நிலையத்திற்கு அண்மையில் வதிவதுடன் ஏனையோர் தொலைவான பிரதேசங்களிலிருந்து பணிக்கு வருகின்றனர். மேலும், இந்தப் போதானாசிரியைகளில் அனேகர் பதவியுயர்வுக்குரிய உயர்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுடன் இதற்கென இவர்கள் வார இறுதி விடுமுறை நாட்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த நிலையத்தின் சேவையைப் பெறுவதற்கென நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பதிவு செய்துள்ளதுடன், இவர்களுக்கான சேவைகள் வார நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றன. சேவையைப் பெறுவதற்கென வாரநாட்களில் பிள்ளைகள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் இந்த நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறிருக்க, இனிவரும் நாட்களில் சனிக்கிழமைகளிலும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என திருமதி வினிதா சிறிவர்தன அவர்கள் திடீரெனத் தீர்மானித்தார். அரசசேவை மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள், இந்த நிலையத்தின் சேவைகளைப் பெறும்பொருட்டான வேண்டுகோளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், சனிக்கிழமை நாட்களில் பணியில் ஈடுபடுவதன் காரணமாக போதனாசிரியைகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் சனிக்கிழமைகளில் இந்த நிலையத்தைத் திறந்து வைத்திருப்பதென மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக நிலையப் போதனாசிரியைகளிடையே அமைதியின்மை ஏற்பட்டதுடன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு எதிராக முறைப்பாடொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவிற்கு எதிரேயுள்ள தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. சனிக்கிழமைகளில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைத் திறந்து வைத்திருக்க மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்கான காரணமொன்றாக அமைவது,
   (1) சனிக்கிழமைகளில் இந்த நிலையத்திற்கு வருகை தரும் போதனாசிரியைகள் மற்றும் சேவை பெறுநரால் எதிர்நோக்கப்பட்ட போக்குவரத்துச் சிக்கல் மிக குறைவான மட்டத்தில் காணப்பட்டமையாகும்.
   (2) சனிக்கிழமைகளில் பணிபுரிய வேண்டி ஏற்பட்டமைக்குப் பதிலாக திங்கட்கிழமை போதனாசிரியைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டமையாகும்.
   (3) நிலையத்தின் சேவைகளைப் பெற சந்தர்ப்பம் கிடைக்காதோருக்கு சந்தர்ப்பம் கிடைத்தமையாகும்.
   (4) நிருவாகிக்கு நிலையத்தின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு தான் விரும்பியபடி தீர்மானங்களை மேற்கொள்ள முடிந்தமையாகும். (.........)

2. போதனாசிரியைகளிடையே அமைதியின்மை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய ஒரு காரணமாக அமையத்தக்கது,
   (1) சனிக்கிழமை நாட்களில் நிலையத்திற்கு வரும்போது போக்குவரத்துச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை.
   (2) தற்சமயம் பதிவுசெய்துள்ள எண்ணிக்கையிலும் மிக அதிகமான எண்ணிக்கையிலான பிள்ளைகளுக்கு சேவையை வழங்க வேண்டி ஏற்பட்டமை.
   (3) சனிக்கிழமை நாட்களில் ஏனைய நாட்களை விட அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் நிலையத்திற்கு வருவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்பட்டமை.
   (4) வார இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுக்கான உயர் கல்வி நடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டமை. (.........)

3. சனிக்கிழமை நாட்களில் பிள்ளை அபிவிருத்தி நிலையத்தைத் திறந்து வைத்திருப்பதெனும் தீர்மானம் காரணமாக நிவாரணம் பெறும் தரப்பு / தரப்பினர்,
   (1) சிறுவர் அபிருத்தித் திணைக்களப் பணிப்பாளர்.
   (2) பிள்ளை அபிருத்தி நிலைய நிருவாகி.
   (3) பிள்ளை அபிருத்தி நிலையப் போதனாசிரியைகள்.
   (4) தொழில் செய்யும் பெற்றோரும் பாதுகாவலர்களும். (.........)

[பக் 3 ஐப் பார்க்க.

4. பிள்ளை அபிவிருத்தி நிலையத்தை சனிக்கிழமைகளில் திறந்து வைத்திருக்க மேற்கொண்ட தீர்மானத்திற்கு முன்பதாக, திருமதி வினீதா சிறிவர்தன அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கத்தக்க சிறந்த படிமுறை;
   (1) நிலையப் போதனாசிரியைகளுடன் கலந்துரையாடுதல்.
   (2) சேவை பெறும் பெற்றோர் மற்றும் பாதுகாவலருடன் கலந்துரையாடுதல்.
   (3) சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருடன் கலந்துரையாடுதல்.
   (4) சேவையைப் பெறும் பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல். (.........)

5. சமர்பிக்கப்பட்டுள்ள முறையீடு தொடர்பாக சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரால் மேற்கொள்ளத்தக்க மிகச் சிறந்த படிமுறை,
   (1) சனிக்கிழமை நாட்களில் நிலையத்தைத் திறந்து வைத்திருப்பதனை உடனடியாக இடைநிறுத்துதல்.
   (2) நிலைய நிருவாகிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை நடாத்துதல்.
   (3) சேவையைப் பெறும் பெற்றோர், பாதுகாவலர்களுடன் கலந்துரையாடுதல்.
   (4) நிலைய நிருவாகி, போதனாசிரியைகள் ஆகியோரைக் கலந்துரையாடலுக்கு அழைத்தல். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **6** தொடக்கம் **10** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வை / சந்தர்ப்பத்தை அடிப்படையாக கொண்டனவாகும்.

சிறுவர் அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவைகள் பிரிவின் உதவிப் பணிப்பாளரினால், திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படும் சரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு, 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட, காய்கறிக் கொள்வனவு தொடர்பாக நிலைய நிருவாகியினால் சிபாரிசு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட சில பற்றுச் சீட்டுகளும் உறுதிச் சீட்டுகளும் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பற்றுச் சீட்டுகளிலும் உறுதிச் சீட்டுகளிலும் பின்வரும் குறைபாடுகளும் வழுக்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- ❊ பற்றுச் சீட்டுகளுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் மாதாந்தம் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதும் அந்த அறிவுறுத்தலைக் கவனிக்காது சில மாதங்களுக்குரிய பற்றுச் சீட்டுகள் ஒரே தடவையில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்
- ❊ சில மாதங்களுக்குரியதென அனுப்பப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்களின் இலக்கங்கள், அண்மித்த ஒழுங்கில் காணப்படல்.
- ❊ ஒரு நிறுவனத்திலிருந்து மட்டுமே பற்றுச் சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.
- ❊ 2015 ஆம் ஆண்டு முழுவதும் ஒரே எண்ணிக்கையிலான சிறுவர்களே தங்கியிருந்த போதும் கொள்வனவு செய்யப்பட்ட காய்கறிகளின் அளவு மாதாந்தம் கூடிக்குறைந்திருத்தல்.

இந்த நிகழ்வுக்கு /சந்தர்ப்பத்திற்கு அமைய கீழ்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

6. பற்றுச்சீட்டுகள் மற்றும் உறுதிச்சீட்டுகள் ஆகியவற்றில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள், வழுக்கள் தொடர்பாக சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் மேற்கொள்ளத்தக்க சிறந்த நடவடிக்கை,
   (1) உரிய பற்றுச்சீட்டு, உறுதிச்சீட்டு ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளாது இருத்தல்.
   (2) பற்றச்சீட்டு, உறுதிச்சீட்டு ஆகியன தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்ளல்.
   (3) காய்கறிகளை வழங்கிய நிறுவன உரிமையாளரை அழைத்து விசாரித்தல்.
   (4) நிலைய நிருவாகியின் பணியை இடைநிறுத்தி ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளல். (.........)

7. சரண சிறுவர் அபிவிருத்தி நிலைய நிருவாகி, திணைக்கள அறிவுறுத்தல்களைப் **பின்பற்றாத** சந்தர்ப்பமாக அமைவது,
   (1) ஒரே நிறுவனத்திலிருந்து காய்கறிகளைக் கொள்வனவு செய்தல்
   (2) கிட்டிய இலக்கங்கள் கொண்ட பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்தல்
   (3) பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுக்குரிய உறுதிச்சீட்டுகளை மாதாந்தம் சமர்ப்பிக்காமை
   (4) பற்றுச்சீட்டுகள், உறுதிச்சீட்டுகள் ஆகியவற்றைப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்காமை (.........)

8. 2015 ஆம் ஆண்டு பூராகவும், சரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியிருந்த பிள்ளைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், பிரச்சினைக்குரிய விடயமாக அமைவது,
   (1) ஒவ்வொரு மாதமும் போதியளவு காய்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டதா என்பதாகும்.
   (2) ஒவ்வொரு மாதத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட காய்கறிகளின் அளவில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டமைக்கான காரணம் எதுவென்பதாகும்.
   (3) ஒரே நிறுவனத்தில் மட்டும் காய்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான காரணம் எதுவென்பதாகும்.
   (4) காய்கறிக் கொள்வனவு தொடர்பான பற்றுச்சீட்டுகள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படாமை ஏனென்பதாகும். (.........)

[பக் 4 ஐப் பார்க்க.

9. உரிய பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்வது தொடர்பாக, பணிப்பாளரினால் மேற்கொள்ளத்தக்க சிறந்த நடவடிக்கை,
   (1) நிருவாகியை சேவையிலிருந்து இடைநிறுத்திய பின்னர் கொடுப்பனவை மேற்கொள்ளல்.
   (2) விசாரணையின் பின்னர் அதன் சிபாரிசின் அடிப்படையில் கொடுப்பனவை மேற்கொள்ளல்.
   (3) உரிய பற்றுசசீட்டுக்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்ளாதுவிடல்.
   (4) 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத பற்றுச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவை மட்டும் மேற்கொள்ளல். (.........)

10. சரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் குறைபாடுகள் கொண்ட பற்றுச்சீட்டுகள், உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பான ஒட்டுமொத்த நிகழ்வை அடிப்படையாக கொண்டு, சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் மேற்கொள்ளத்தக்க சிறந்த நடவடிக்கை,
   (1) சரண சிறுவர் நிலையத்துக்கான அனைத்துக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் முழுமையான விசாரணையை மேற்கொள்ளல்.
   (2) சரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு காய்கறி விநியோகித்த நிறுவனம் தொடர்பாக, பொலீசில் முறைபாடு செய்தல்.
   (3) உறுதிச்சீட்டுகளைத் தயாரித்த சரண சிறுவர் நிலைய அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளல்.
   (4) சரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்குக் காய்கறிகளை விநியோகித்த நிறுவனத்திற்கு எதிராக உடனடியாக வழக்குத் தாக்கல் செய்தல். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாக கொண்டனவாகும்.

சிறுவர் நலனோம்பல் அமைச்சின் செயலாளருக்குக் கிடைத்த அனாமதேய தொலைபேசி அழைப்பில் அந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் சிறுவர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய 'புரயாய' சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினது நிருவாகியினால் நிலைய வளவில் இருந்த பெறுமதியான மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. குறித்த தொலைபேசி அழைப்புத் தொடர்பாக செயலாளரினால், சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டு உடனடியாக பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டது.

'புரயாய' சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில், கடந்தகாலப் பகுதியில் நிலவிய சீரற்ற நிருவாகம் காரணமாக அப்போதைய நிருவாகி அகற்றப்பட்டு, புதிய நிருவாகி ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டார். புதிதாக நியமிக்கப்பட்ட நிருவாகி, திணைக்களத்திலுள்ள மிகத் திறமையானதும் நேர்மையானதும் செயற்திறன் மிக்கவரானதுமான போதிலும், செயலாளரினால் அறிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக, தனிப்பட்ட ரீதியில் தான் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது என பணிப்பாளர் தீர்மானித்தார்.

இதன்படி 'புரயாய' சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு, கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட பணிப்பாளரினால் பல மாதங்களுக்கு முன்னர் புற்கள் மண்டிக் காணப்பட்ட நிலையத்திற்குப் பதிலாக மிக கவர்ச்சிகரமான சூழலைக் கொண்ட நிலையமாக அது மாறியிருந்தமையை அவதானிக்க முடிந்தது. மேலும், நிலைய வளவின் அந்தத்தில் சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மரக்குற்றிகள் பற்றி வினவியபோது நிலையச் சூழலினை அலங்காரமிக்கதாக்கவென பொருளாதாரப் பெறுமதி அற்ற சிறிய மரமொன்று தறிக்கப்பட்டு அதன் மரக்குற்றிகள் நியம முறைக்கமைய அகற்றப்படும் வரை அடுக்கி வைக்கப்பட்டுள்ளன என நிலைய நிருவாகியினால் பணிப்பாளருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு /சந்தர்ப்பத்திற்கு அமைய கீழ்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

11. கிடைக்கப்பெற்ற அனாமதேய தொலைபேசி அழைப்பு தொடர்பாக, சிறுவர் நலனோம்பல் அமைச்சின் செயலாளரின் பணிக்கூறு தொடர்பான சிறப்பான கூற்றொன்று,
   (1) செயலாளரினால் மேற்கொள்ளப்படும் பணிக்கூறு ஏற்புடையதாகும்.
   (2) குறிப்பிட்ட தொலைபேசி அழைப்புத் தொடர்பான தகவல்கள், இரகசியப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்
   (3) குறிப்பிட்ட தகவல், சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
   (4) அனாமதேய தொலைபேசி அழைப்பு ஆகையால் அது பற்றி கரிசனை கொண்டிருக்கத் தேவையில்லை. (.........)

12. செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலுக்கமைய, சிறுவர் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் எடுத்திருக்கப்படத்தக்க சரியான நடவடிக்கை,
   (1) அனாமதேய தொலைபேசி அழைப்பாகையால் உரிய அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொள்ளாதிருத்தல்.
   (2) நிருவாகிக்கு எதிராக புரயாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தல்
   (3) திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரை புரயாய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அனுப்பி தகவல்களை அறிந்துகொள்ளச் செய்தல்.
   (4) புரயாய சிறுவர் அபிவிருத்தி நிலைய நிருவாகிக்கு இடமாற்றம் வழங்குதல். (.........)

[பக் 5 ஐப் பார்க்க.

13. புரயாய சிறுவர் அபிவிருத்தி நிலைய வளவில் நின்ற மரத்தை வெட்டி அகற்ற முன்னர் நிருவாகியினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கை,
   (1) அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல்.
   (2) திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல்.
   (3) நிலையப் பணிக்குழாத்தினருக்கு அறிவித்தல்.
   (4) புரயாய பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல். (.........)

14. சிறுவர் அபிவிருத்தித் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களின் முன்னைய மற்றும் தற்போதைய சேவை நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், அந்த திணைக்களப் பணிப்பாளருக்கு முக்கியமாக அமையும் சந்தர்ப்பமானது,
   (1) பிரச்சினைகளை இனங்காணல்.
   (2) எதிர்காலத் திட்டங்களை வடிவமைத்தல்.
   (3) உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மதிப்பிடல்.
   (4) உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்தை அனுமதித்தல். (.........)

15. புரயாய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான கண்காணிப்புப் பயணத்தின் பின்னர், பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டியது,
   (1) அனுமதியின்றி மரத்தை வெட்டியகற்றியமைக்காக நிருவாகியினை சேவை இடைநிறுத்தம் செய்தல்.
   (2) மரம் வெட்டி அகற்றப்பட்டமைக்கான முறையான விசாரணையை மேற்கொள்ளல்.
   (3) அவதானிப்பினூடாகப் பெற்ற விடயங்கள், நிலையத்தின் தற்கால நிலைமை ஆகியன பற்றி செயலாளருக்கு அறிக்கையிடல்
   (4) பிறிதொரு நிருவாகியை புரயாய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உடனடியாக நியமித்தல் (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **16** தொடக்கம் **20** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாக கொண்டனவாகும்.

திரு. வாசல பண்டார அவர்கள் நகர்ப்புறப் பிரதேச செயலாளர் பிரிவான, மாகம பிரதேச செயலாளர் பிரிவுக்கான பிரதேச செயலாளராவார். தனது அலுவலகத்தில் பணியிலிருந்த சமயம் திரு. வாசல பண்டார அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பில், அவரது பிரிவிலுள்ள வீடொன்றில் தனிமையாக சிறுவர்கள் இருவர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, உடனடியாக குறிப்பிட்ட பிரதேசத்திற்குரிய கிராம அலுவலர் உட்பட காரியாலய அதிகாரிகள் குழுவொன்று, குறித்த வீட்டைப் பரிசோதிப்பதற்கென வாசல பண்டார அவர்களால் அனுப்பப்பட்டது. அப்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* 10 வயதுடைய ஆண் பிள்ளையொன்றும் 03 வயது மதிக்கத்தக்க பெண் பிள்ளையொன்றும் வீட்டில் தனியாக உள்ளனர்.
* வீட்டின் யன்னல், மற்றும் கதவுகள் தாளிடப்பட்டிருந்தன.
* இரண்டு பிள்ளைகளும் விளையாடியவாறு உள்ளனர்.
* வீட்டைச் சுற்றிவர மதில் உள்ளது.

இதுபற்றி இரு பிள்ளைகள் தொடர்பாக ஆராய்ந்தபோது, எல்லா வார நாட்களிலும் இரண்டு பிள்ளைகளுக்கும் தேவையான உணவு, விளையாட்டுப் பொருட்கள் ஆகியன உட்பட பிற தேவைகள் அனைத்தையும் வழங்கிய பின்னர் யன்னல், கதவுகள் ஆகியனவற்றைத் தாழிட்டு, பெற்றோர்கள் வேலைக்குச் செல்வதாகத் தெரியவந்தது. இதன்போது மூத்த பிள்ளை, பெற்றோர் திரும்பி வரும்வரை சிறிய பெண் பிள்ளையைப் பராமரிப்பதாகவும், மேலும், இது அந்தப் பிள்ளைகள் இருவருக்கும் சாதாரண நிகழ்வெனவும் அறிய முடிந்தது.

இந்த நிகழ்வுக்கு /சந்தர்ப்பத்திற்கு அமைய கீழ்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. இந்த நிகழ்வு தொடர்பாக திரு. வாசல பண்டாரவினால் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை,
   (1) இரண்டு பிள்ளைகளையும் சிறுவர் இல்லமொன்றுக்கு அனுப்புதலாகும்.
   (2) பொலீசுக்குத் தெரியப்படுத்தி இரண்டு பிள்ளைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலாகும்.
   (3) இரண்டு பிள்ளைகளையும் தனது பொறுப்பில் ஏற்றுக்கொள்ளலாகும்.
   (4) இரண்டு பிள்ளைகளையும் பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு அழைத்துவரலாகும். (.........)

[பக் 6 ஐப் பார்க்க.

17. பிள்ளைகள் இருவரும் தொடர்பாக, திரு. வாசல பண்டார அவர்களுக்குக் கிடைத்த தகவல், பொலீசுக்கு அறியக் கிடைக்குமானால் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கை,
   (1) இரண்டு பிள்ளைகளையும் பொலீஸ் பொறுப்பில் எடுத்து பெற்றோரை பொலீசுக்கு அழைத்து விசாரணையை ஆரம்பித்தல்.
   (2) இரண்டு பிள்ளைகளையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   (3) இரண்டு பிள்ளைக்ளையும் பெற்றோர்கள் இருக்குமிடத்துக்குக் கொண்டுசென்று ஒப்படைத்தல்.
   (4) இரண்டு பிள்ளைகளையும் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல். (.........)

18. இந்த இரண்டு பிள்ளைகளினதும் பெற்றோரால் மேற்கொள்ளப்பட்ட சட்டத்துக்கு முரணான செயற்பாடு,
   (1) பிள்ளைகள் வீட்டில் இருப்பதாக பிரதேச செயலாளருக்கு அறிவிக்காமை.
   (2) பிள்ளைகள் வீட்டில் இருப்பதாக பொலீசுக்கு அறிவிக்காமை.
   (3) பிள்ளைகள் வீட்டில் இருப்பதாக நீதிமன்றுக்கு அறிவிக்காமை.
   (4) பிள்ளைகளை வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தமை. (.........)

19. மூத்த பிள்ளையின் உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பமாக அமைவது,
   (1) பொலீசுக்கு அழைத்துச் செல்லப்படல்.
   (2) சகோதரியுடன் வீட்டில் இருத்தல்.
   (3) பாடசாலை செல்ல சந்தர்ப்பம் கிடைக்காமை.
   (4) வீட்டில் பாதுகாப்புக்கென யாரும் இருக்காமை. (.........)

20. இந்த நிகழ்வு தொடர்பாக குடிமக்களால் அறிவிப்பை மேற்கொள்ளக் கூடிய பிறிதொரு நிறுவனம்,
   (1) வேலைவாய்ப்புப் பணியகம்
   (2) சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
   (3) சட்ட உதவி ஆணைக்குழு
   (4) இணக்க சபை (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

● **21** தொடக்கம் **30** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

மானுடவள அபிவிருத்தி அதிகார சபை ஒரு அரச நியதிச்சட்ட அதிகார சபையாகும். இந்த அதிகார சபை நிறுவப்பட்டு 25 வருடங்கள் கடந்துள்ள போதும் இது அதிகார சபை, எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதில் தோல்வி கண்டுள்ளது. இதன் காரணமாக இந்த அதிகார சபையை புதிய பணிப்பாளர் சபையின் கீழ் முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்த அரசினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

மானுட வள அபிவிருத்தி அதிகார சபையின் புதிய பணிப்பாளர் சபையினால், அதிகார சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கான குறுங்கால மற்றும் நீண்டகால உபாய முறைகள் திட்டமிடப்பட்டன. இதற்கென மிகக் குறுகிய காலப்பகுதியில் அதிகார சபையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது அதிகார சபையின் உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் ஆகியன கருத்திற்கொள்ளப்பட்டதுடன், அதிகார சபையின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றை எய்துவதற்கென பயன்தருதன்மை உள்ளடக்கப்பட்டதுடன் கொண்டவாறான குழுக்களாக்குதலை அதிகார சபையினுள் மேற்கொள்வதெனத் திட்டமிடப்பட்டது.

இதன்போது அதிகாரசபையின் ஒவ்வொரு தொழிலுக்கும் பொறுப்புகள் இனங்காணப்பட்டதுடன், அந்தப் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு தொழிலுக்குமான தொழில்சார் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தப் பகுப்பாய்வின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிலுக்குமான தொழில் விவரக்கூறுகள் தயாரிக்கப்பட்டன. இதன்போது ஒவ்வொரு தொழிலுக்குமுரிய ஆகக்குறைந்த தொழிற்றகைமைகள், கல்வித்தகைமைகள் ஆகியன உள்ளடக்கப்பட்டதுடன் அதிகார சபையினுள் மேற்கொள்ளப்படும் ஒட்டுமொத்தக் குழுக்களாக்குதலின் போது அதிகார சபைக்கென குறுங்கால, நீண்டகால அடிப்படையில் சகல மட்டங்களிலுமுள்ள பதவிகளுக்கான ஆளணித் தேவை இனங்காணப்பட்டு ஆட்சேர்ப்பை மேற்கொள்வதெனத் திட்டமிடப்பட்டது. இதற்கமைய நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, முதற் படியாக அதிகார சபைக்குத் தேவையான மானுட வளங்கள் திட்டமிடப்பட்டதுடன், எதிர்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு மானுட வளங்களைத் திட்டமிட முதன்மையாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாறு, அதிகார சபையின் புதிய பணிப்பாளர் சபையால், குறுங்கால மற்றும் நீண்ட காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு மானுட வளங்களைத் திட்டமிடுவதன் மூலம் தற்சமயம் அதிகார சபையின் சேவையாற்றும் பணியாளர்களை பயன்தருதன்மைமிக்க விதத்தில் அதிகாரசபையின் மானிட வள அபிவிருத்தி நீரோட்டத்தில் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசேடமாக அதிகார சபையின் வினைத்திறன், பயன்தரு தன்மை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கென இந்த பணியாளர்களின் சேவையைப் பயன்தரு வகையில் பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டது. இதன்போது, அதிகார சபையின் முகாமைத்துவ மட்டங்கள் மறுசீரமைக்கப்படல் மற்றும் பணியாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள் ஆகியன அறிமுகஞ் செய்யப்பட்டதுடன், பணியாளர்களுக்கு நியம முறையில் பணிகள் ஒப்படைக்கப்பட்டு அதிகார சபையின் நோக்கம், குறிக்கோள்கள் மற்றும் சட்டங்கள் பற்றிய அடிப்படை விளக்கம் முழு பணிக்குழாத்தினருக்கும் அளிப்பதற்கு தேவையான நடவடிக்கையெடுக்கப்பட்டு, சிறப்பான சேவை வழங்கும் சூழலை அதிகார சபையினுள் உருவாக்க திட்டமிடப்பட்டது.

[பக் 7 ஐப் பார்க்க.

பல வருடங்களாக பல்வேறு நிருவாகச் சீர்கேடுகளில் சிக்குண்டிருந்த பணியாளர்களினால் நியமமில் முறையிலான ஒழுங்கமைப்புகள் சில உருவாக்கப்பட்டிருந்தன. அவர்களது தொழிலுரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட இவ்வாறான ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய, புதிய பணிப்பாளர் சபையின் அதிகார சபையினால், அதிகார சபையினுள் நியம முறைக்கமைய சம்பள ஏற்றத்தாழ்வுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவும், குறைகேள் குழுவும் தாபிக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

21. மனித வள அபிவிருத்தி அதிகார சபையின் குழுவாக்கத்தின் பிரதான முகாமைத்துவச் செயற்பாடு யாது?

.....................................................................................................

22. அந்த முகாமைத்துவச் செயற்பாட்டை மேற்கொள்ளும் செயன்முறையின் அடிப்படைப் படிமுறை யாது?

.....................................................................................................

23. அந்தப் படிமுறை தொடர்பான செயன்முறையின்போது கைக்கொள்ளப்படவேண்டிய அடிப்படைச் செயன்முறை யாது?

.....................................................................................................

24. தொழிலுக்குரிய பொறுப்புக்கள் அடங்கிய ஆவணம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

.....................................................................................................

25. மனிதவள அபிவிருத்தி அதிகார சபையில், அவ்வத் தொழில்களுக்கெனத் தயாரிக்கப்படும் தொழில் விவரக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய **ஒரு** விடயத்தைக் குறிப்பிடுக.

.....................................................................................................

26. மனிதவள அபிவிருதி அதிகார சபையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படுத்த எதிர்பார்க்கும் **ஒரு** உபாயமுறையைக் குறிப்பிடுக.

.....................................................................................................

27. மனிதவள அதிகார சபையில், சாதகமான சேவைச் சூழலை உருவாக்கப் பயன்படுத்தப்படும் **ஒரு** நடவடிக்கையைக் குறிப்பிடுக.

.....................................................................................................

28. மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் வினைத்திறனை அளவிடப் பயன்படுத்தத்தக்க **ஒரு** குறிகாட்டியைப் பெயரிடுக.

.....................................................................................................

29. மனித வள அபிவிருத்தி அதிகார சபையில், நியமமில் ஒழுங்கமைப்புகள் உருவாக ஏதுவாகமைந்த **ஒரு** காரணத்தைக் குறிப்பிடுக.

.....................................................................................................

30. மனித வள அபிவிருத்தி அதிகார சபையில் ஏற்படுத்தப்பட்ட **ஒரு** நியம ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுக.

.....................................................................................................

*(01 x 10 = 10 புள்ளிகள்)*

● **31** தொடக்கம் **35** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாக கொண்டனவாகும்.

உட்கட்டமைப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட திரு. விக்ரம சிறிவர்தன அவர்கள் கூட்டுத்தாபத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்புத் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்தபின் தனது உத்தியோகபூர்வ நடவடிக்கையை ஆரம்பித்தார்.

செயல்சார்ந்த ஒழுங்கமைப்பாக உருவாகியுள்ள இந்தக் கூட்டுத்தாபனத்தின் பணிக்குழு மற்றும் பணிகள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை அறிவதற்கென கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை ஆராய்ந்ததன் மூலம், அதிகாரசபையினுள் அதிகாரப் பகிர்வு மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு உள்ள இடம் ஆகியவற்றை தலைவரால் இனங்காண முடியுமாயிற்று.

சிறப்பாக உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் அவ்வப் பிரிவுகள் மூலமாக ஆற்றப்படும் கருமங்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ள முறையை அந்தந்த விடயங்களின் மேற்பார்வைக்காக வெவ்வேறு மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த முறை கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புக்

[பக் 8 ஐப் பார்க்க.

கட்டமைப்பின் மூலம் அறியக்கூடியதாயிற்று. இதன்மூலமாக அவ்வக் கருமங்களுக்கு உரியவாறு அந்தந்தப் பிரிவுகளின் அதிகாரிகள் சிறப்புத்திறன்களைக் கொண்டிருப்பதையும் பிரிவு மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்ள இலகுவாக உள்ளதனையும் அவதானிக்க முடிந்தது.

எவ்வாறெனினும், கூட்டுத்தாபனத்திற்குரிய ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில், அதிகாரிகளின் வகைகூறல் பிரிவுசார்ந்த ரீதியாக மட்டும் காணப்படுவதனால், அதிகாரிகளின் வகைகூறலில் நிச்சயமற்றதன்மை கூட்டுத்தாபனத்தில் காணப்படுவதனால் அவ்வாறு பிரிவு மட்டத்திலான வகைகூறல் மூலமாக கூட்டுத்தாபனத்தின் பொதுவான இணைப்பாக்கத்தின்போது சிக்கல்கள் ஏற்படக்கூடும் என புதிய தலைவருக்குத் தெளிவாயிற்று.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. செயல்சார்ந்த கூட்டுத்தாபனம் என்ற வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில் உள்ள இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

32. உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில், புதிய தலைவரால் இனங்காண முடிந்த பிரச்சினைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

33. உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தில் உள்ள ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினூடாகக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டை** எழுதுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

34. உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவரால், ஒழுங்கமைப்புக் குறிப்பின் மூலம் விளங்கிக் கொள்ளக்கூடிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

35. உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தில் தாபிக்கப்பட்டுள்ள, ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் மூலமாக அந்தக் கூட்டுத்தாபனத்திற்கு நிருவாகரீதியாக ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

● **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

தேசிய பசுமை சேவைகள் அதிகார சபைக்கு, பசுமை முன்னோடிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கென விண்ணப்பங்களைக் கோரி பொருத்தமானவர்களை நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்போது இச்செயலாளரை அதிகார சபையின் நன்மதிப்புக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு, பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யவும் தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லாத வகையிலும் நேர்முகப் பரீட்சையை சரியாகத் திட்டமிட்டு நடாத்தவும் விண்ணப்பதாரிகளின் ஆளுமை மற்றும் பதவிக்குரிய விசேட தகுதி தொடர்பான தகைமைகளும் மதிப்பிடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளவுமென நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கான அறிவுறுத்தற் கோவையும் தயாரிக்கப்பட்டது.

இந்தப் பதவிக்கென அதிக எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் முன்வருவாராயின் அடிப்படைத் தகைமைகள் உட்பட சில நியதிகளை அடிப்படையாகக் கொண்டு, அடிப்படைத் தகுதிகளைக் கொண்டோரை மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை நூறுக்கு மேல் அதிகரிக்குமெனின் அவர்களை எழுத்துப் பரீட்சைக்கு உட்படுத்தி அதில் சிறப்பாகத்தேறும் பரீட்சார்த்திகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இது தவிர பசுமை முன்னோடிகள் பதவிக்கான நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் மேற்படி விடயம் தொடர்பாக கொண்டுள்ள அறிவு மற்றும் அது தொடர்பான திறன்கள் ஆகியவற்றை அளவிடுவதற்கு கட்டமைப்பு ரீதியான வாய்மொழி வினாக்களை வினவும் முறையைக் கைக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

[பக் 9 ஐப் பார்க்க.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

36. பசுமை முன்னோடிகள் பதவிக்கு விண்ணப்பித்தோரில் பொருத்தமான நபர்களை **மட்டும்** நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தக் கைக்கொள்ளப்படும் முறைகள் **இரண்டை** எழுதுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

37. முழுமையான நேர்முகப் பரீட்சையொன்றை ஒழுங்கு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய பிரதான துறைகள் **இரண்டு** தருக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

38. விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலிக்கும்போது, நேர்முகத் தேர்வுக் குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

39. நேர்முகத் தேர்வுக்குத் விண்ணப்பதாரிகளிடம் வினவப்படவேண்டிய வினாக்கள் தொடர்பாக முக்கியமாக அமையும் விடயங்கள் **இரண்டைத்** தருக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

40. விண்ணப்பதாரிகளின் தகைமைகள் நேர்முகத் தேர்வின்போது சரியாக மதிப்பிடப்படாவிடின் ஏற்படக்கூடிய **பிரதிகூலங்கள் இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

- **41** தொடக்கம் **45** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

நாட்டின் மிகவும் பின்தங்கிய மாவட்டமான மகாவெல மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கென அரசினால் மகாவெல அபிவிருத்தி அதிகார சபையினை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக அதிகார சபையினை நிறுவும் நோக்கம், குறிக்கோள்கள் ஆகியவற்றை தலையாய இலக்காகக் கொண்டு மகாவெல அதிகார சபையினை நிறுவும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினை சிறப்பாகத் தயாரிக்கும் பொறுப்பு விசேட சிறப்பறிஞர் குழுவொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் இக்குழுவின் மூலமாக அதிகார சபையின் தலையாய பணிகள், அதிகார சபையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஆகியவற்றை இனங்காண்பதே எதிர்பார்ப்பாகும். மேலும், இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும்போது அதிகார சபையின் நோக்கங்களின்பால் பயணிக்கக்கூடிய சூழலை உருவாக்கவும் உபாய முறைகள் மற்றும் கொள்கைகளை வகுக்கவும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் செயன்முறையின்போது, திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு அதிகார சபையில் ஏற்படக்கூடிய பணி நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற தொழிலாளர் சார்ந்த தாக்கங்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், அதிகார சபையின் ஒழுக்கத்தைச் சீராகக் கட்டியெழுப்பவென சட்ட மற்றும் உபாயத் திட்ட முறைமைகளையும் உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கமைய மகாவெல அபிவிருத்தி அதிகார சபையை நிறுவுவதற்கான முழுமையான திட்டச் செயலொழுங்கை அடிப்படையாகக் கொண்டு மகாவெல அபிவிருத்தி அதிகார சபையின் நிருவாகக் கட்டமைப்பு திட்டமிடப்பட்டு உரிய பிரிவுகள், கிளைகள் ஆகியவற்றை நிறுவுவதெனவும் அந்தப் பிரிவுகள் மற்றும் கிளைகளுக்குத் தேவையான பணியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

[பக் 10 ஐப் பார்க்க.

41. மகாவெல அபிவிருத்தி அதிகார சபையை நிறுவும் நடவடிக்கையை, சீராக்கத் திட்டமிடுவதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

42. மகாவெல அபிவிருத்தி அதிகார சபையை நிறுவும் நடவடிக்கையைத் திட்டமிடும்போது, முக்கியமாக அமையும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

43. மகாவெல அபிவிருத்தி அதிகார சபையைத் திட்டமிடும்போது பயன்படுத்த எதிர்பார்க்கும் திட்ட வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

44. மகாவெல அபிவிருத்தி அதிகார சபையின் நிருவாகக் கட்டமைப்பைத் திட்டமிடும்போது முக்கியமாக அமையும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

45. மகாவெல அபிவிருத்தி அதிகார சபைத் திட்டம் தோல்வி அடைவதில், நிறுவன அகச் சூழலினால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

## பகுதி II

● **46** தொடக்கம் **50** வரையான வினாக்கள் பின்வரும் நிகழ்வு / சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

நாளாந்தச் செய்திப் பத்திரிகையான சுழிய பத்திரிகை, பிரதான செய்தியாக அரச கூட்டுத்தாபனமான வசதிகள் சேவைகள் கம்பனி பற்றிய அறிக்கையை வெளியிடப்பட்டிருந்தது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலாபமீட்டி, திறைசேரிக்கு இலாபப் பங்கினை அளித்த உற்பத்தித்திறன் கொண்ட வணிகச் சந்தைக்கான சிறப்புத் தரச் சான்றுப் பரிசு போன்ற பல வெகுமதிகளைப் பெற்ற இந்த கம்பனிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட நிருவாக முகாமைத்துவத்தின் தொலைநோக்கற்ற பல செயற்பாடுகள் காரணமாக இந்த செய்திப் பத்திரிகையில் இவ்வாறானதொரு அறிக்கை வெளியாகியுள்ளது.

விசேடமாக புதிய நிருவாக முகாமைத்துவம் நியமிக்கப்பட முன்னர் இருந்த நிருவாக முகாமைத்துவத்தின் மூலமாக நியம முறையிலான முறையான பதவியுயர்வுகள், ஆட்சேர்ப்பு முறைமை ஆகியவற்றுக்குப் பதிலாக புதிய நிருவாக முகாமைத்துவத்தின் மூலம் தனது சுய விருப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டமை, திறைசேரி அல்லது பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி நிபுணத்துவ ஆலோசகர்களை நியமித்து அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டமை போன்றன பற்றி, புதிய சான்றுகளுடன் இந்தப் பத்திரிகையில் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

அவ்வாறே கம்பனியின் நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றை நோக்கி பயணிக்கையில் பணியாட்களின் கருத்துக்களினைப் பெற்று அந்தத் தீர்மானங்களை அமுல்செய்தல், இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது கூட்டுப்பொறுப்பை ஏற்றல், அந்தத் தீர்மானங்கள் சிறந்தவையாக காணப்படல், கூட்டுப் பொறுப்பு பணிக்குழுவினரிடையே நிலவுதல் தொடர்பான நல்மனப்பாங்கு மேம்பாடு காணப்படல் போன்றன பங்கேற்பு சனநாயக நிருவாகக் கோலம் கொண்ட வசதிகள் சேவைகள் கம்பனிக்கு முற்றுமுழுவதும் மாறுபட்ட நிருவாகக் கோலம் புதிய முகாமைத்துவத்தின் மூலம் இந்த கம்பனியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என சுழிய பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியாட்களின் குறைபாடுகள், நலனோம்பல் ஆகியவற்றை முறையிட காணப்பட்ட பொறிமுறையும் புதிய முகாமைத்துவ நிருவாகத்தினால் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக தொழிலாளர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விசேடமாக புதிய முகாமைத்துவ நிருவாகத்தின்

[பக் 11 ஐப் பார்க்க.

தலைவர் சுழிய பத்திரிகை அறிக்கை மூலமாக நேரடியாகச் சாடப்பட்டுள்ளார். தலைவரினால், தமக்கு இணக்கமான பணியாட்களுக்கு பல்வேறு சலுகைள் மற்றும் சௌகரியங்கள் வழங்கப்படுவதுடன் நடுநிலையான மற்றும் எதிர்ப்புக்காட்டும் பணியாட்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிபபிடப்பட்டுள்ளது.

மேலும், அதிகாரம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றை தனது கைகளில் எடுத்து தீர்மானங்களை மேற்கொள்ளும் ஏகபோக உரிமையையும் ஏற்படுத்தி கட்டளைகள், பணிப்புரைகளை வெளியிட்டு புதிய தலைவர் அதிகாரத்துவப் பாங்கான தலைவராக தொழிலாளர் அடக்குமுறையை செயற்படுத்துகிறார் என அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு / சந்தர்ப்பத்திற்கு அமைய கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **விடையை தரப்பட்டுள்ள தாளில்** எழுதுக.

46. வசதிகள் சேவைகள் கம்பனியின் தற்கால மற்றும் முன்னைய முகாமைத்துவ நிருவாகங்களில் காணப்பட்ட தலைமைத்துவப் பாங்குகளை ஒப்பீட்டுரீதியாக விவரிக்குக. *(08 புள்ளிகள்)*

47. வசதிகள் சேவைகள் கம்பனியின் முன்னாள் முகாமைத்துவ நிருவாகத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த அலுவலகப் பணிச்சூழலின் தன்மை எவ்வாறாதென விளக்குக. *(08 புள்ளிகள்)*

48. இந்த அலுவலகத்தினது பணிச்சூழல் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள் எவையென விளக்குக. *(08 புள்ளிகள்)*

49. வசதிகள் சேவைகள் கம்பனியின் புதிய முகாமைத்துவ நிருவாகியின் நடவடிக்கைகள் காரணமாக கம்பனியில் ஏற்படத்தக்க பாதகமான விளைவுகளை விமர்சனரீதியாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

50. சுழிய செய்திப் பத்திரிகையின் வெளியான அறிக்கை தொடர்பாக விசாரணையை நடாத்துவதற்கு வசதிகள் சேவையின் கம்பனிக்குரிய அமைச்சின் செயலாளரினால் அமைச்சின் உதவிச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைய அந்த உதவிச் செயலாளராக நீர் இருப்பதாகவும் அந்த செய்திப் பத்திரிகைச் செய்தி உண்மை எனவும் கொண்டு அமைச்சின் செயலாளருக்கு அனுப்புவதற்கான விசாரணை அறிக்கையின் நகல் பிரதியினைத் தயாரிக்குக. *(08 புள்ளிகள்)*

※ ※ ※

2899

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /
Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2106)**
Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administration Services -2014 (2016)

**(05) ஆக்கபூர்வ, பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள்**
**Creative, analytical and Communication Skills**

| வினா இலக்கம் | புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 (i) | |
| 4 (ii) | |
| 4 (iii) | |
| மொத்தம் | |
| விடைத்தாள் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடையளிக்குக.

சுட்டெண் : ..........................

1. பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிந்து, பகுப்பாய்வுரீதியாகவும் தர்க்கரீதியாகவும் விடயங்களை முன்வைத்து, **250-300** சொற்கள் அடங்கும் வகையில் கட்டுரையொன்று எழுதுக.

   (i) அரசியல் சார்பு, ஊழல் என்பவற்றிலிருந்து விலகி பாரபட்சமின்றி சுதந்திரமாகவும் வினைத்திறனாகவும் மக்களுக்கு சேவையை வழங்குவதே அரச சேவையாளரின் பொறுப்பாகும்

   (ii) இந்த நாட்டின் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகள் தேசிய தனித்துவத்தைப் பேணுவதுடன் உயர் பண்பும், தரமும் கொண்டனவாகப் பேணப்படுவதற்கான வழிமுறைகள்

   (iii) நாட்டு மக்களது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அடக்கி பொருளாதார, சமூக உரிமைகளை மேம்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள்

   (iv) ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, உலக வல்லரசுகள் மேற்கொள்ளும் வழிமுறைகளும் அவற்றின் வெற்றியும்

   (v) நாட்டின் வறிய மக்களை எப்போதும் நிவாரணங்களில் தங்கியிருப்போராக ஆதரவு வழங்குவதை விட சுயபலத்தினால் வசதிபடைத்தோராக உயர்வடையக் கைகொடுப்பதன் பொருத்தப்பாடு

   (vi) இன, மத, அரசியல், மொழி எனும் வகையில் பரவும் தீவிரக் கருத்துகளினால் நாட்டின் ஒருமைப்பாடு, சகவாழ்வு ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள்

[பக் 2 ஐப் பார்க்க.

3. பின்வரும் ஒவ்வொரு பந்தியினதும் முக்கிய கருத்தை இயன்றளவு சுருக்கமாக **ஒரு வாக்கியத்தில்** எழுதி **தடித்த எழுத்துக்களில்** உள்ள பதங்களை விளக்கி எழுதுக.

(i) சட்டமும் ஒழுக்கமும் **ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றது**. சட்டமுரணான விடயங்களாகக் கருதப்படும் கொலை, திருட்டு என்பன பெரும்பாலான மக்களால் ஒழுக்கமற்ற செயல்களாகவே கருதப்படுகின்றன. சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இடையில் ஆச்சரியப்படத்தக்க ஒற்றுமைகள் இருப்பதுடன், ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகவும் இருக்கின்றன. இவை இரண்டும் சமூகத்தின் இலகுவான செயற்பாட்டிற்கான நடத்தைப் பிரமாணங்களை விதிக்கும் நடத்தைக் கோவைகளாகும். மக்கள் சட்டத்தைப் பின்பற்றவே விரும்புகிறார்கள். அதனை மீறுவதற்கல்ல. ஏனெனில், அவற்றை ஒழுக்கரீதியாக சரியானது என கருதுகின்றார்கள்.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(ii) பொதுவாக சனநாயக நாடொன்றின் தனிநபர் உரிமைகளும் சுதந்திரங்களும் அந்நாட்டின் அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. **சமமாக நடாத்தப்படுவதற்கான உரிமையானது** நபரொருவரின் இனம், பால், மதம், அல்லது அரசியல் அபிப்பிராயங்கள் காரணமாக ஓரங்கட்டப்படலாகாது என்பதனையும் உறுதிசெய்கின்றது. அவன் அல்லது அவளின் பேச்சுக்கான உரிமை, சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமை மற்றும் சித்திரவதை, முறைகேடாக கைது செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை போன்றவை அரசியலமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்ற முக்கியமான சில உரிமைகளாகும். இவ்வுரிமைகள் இலங்கை அரசியலமைப்பாலும் உலகின் பல அரசியலமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(iii) அரசியலமைப்பு அது நடைமுறைப்படுத்தப்படும் முறையிலேயே தங்கியுள்ளது. மிகச் சிறந்த அரசியலமைப்பும் நல்ல மனப் பாங்குடன் சரிவர அமுலாக்கப்படாவிட்டால் தோற்றுவிடும். ஒழுங்கற்ற ஓர் அரசியலமைப்பும், நல்ல மனப் பாங்குடன் சிறப்பாக அமுல்படுத்தப்பட்டால் வெற்றியடைந்து விடும். அரசியலமைப்பிலுள்ள குறைபாடுகள் அன்றி, மனிதவினத்தின் தவறுகளே **புதிய ஆசிய சனநாயக நாடுகள்** எதிர்நோக்கும் பெரும் ஆபத்தாகும்.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

*(05 × 3 = 15 புள்ளிகள்)*

4. பின்வரும் ஒவ்வொரு பந்தியையும் வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **சுருக்கமாக விடை** தருக.

(i) பதவியினர் தரத்திலுள்ள பதவியொன்றில் வெற்றிடம் ஏற்படப்போகிறது என்று தெரிந்தவுடனேயே அல்லது அத்தகைய பதவியொன்று உருவாக்கப்பட்டவுடனேயே அத்திணைக்களத் தலைவர், நியமன அதிகாரிக்கு அந்த விடயத்தைத் தெரிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தலில் தான் அப்பதவியை உடனடியாகவே நிரப்புவதற்கு உத்தேசித்துள்ளாரோ அல்லவோ என்பதையும் தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவதற்குத் திணைக்களத் தலைவர் உத்தேசிக்காவிடில் அவர் அதற்கான காரணங்களையும் தெரிவிப்பார். அத்திணைக்களத் தலைவர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்குச் சிபார்சு செய்வாரானால், அவர் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு தனது அறிவிப்பைச் செய்வார். அந்த அறிவிப்புடன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்

[பக் 5 ஐப் பார்க்க.

திட்டத்தின் நியதிகளின்படி வரையப்பட்ட விளம்பரத்தையும் அனுப்பி வைப்பார். அரச சேவை மதியுரைச் சபையின் செயலாளருக்கும் அதன் பிரதியொன்றை அவர் அனுப்பிவைப்பார். சம்பந்தப்பட்ட நியமன அதிகாரி, அந்த அறிவித்தலை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பார். நியமன அதிகாரி விண்ணப்பங்களைப் பெற்று, விண்ணப்பதாரரின் தகுதிகளைச் சரிபார்த்து அவ்விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்துவார். அத்துடன் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டபடி தெரிவுச் சபையொன்றினை அல்லது வாய்மொழிப் பரீட்சைச் சபையினை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்வார். அத்தகைய தெரிவுச் சபைகளில் பொதுவாக தலைவர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். அங்கீகரீக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தில் யாதேனும் குறிப்பிடப்பட்டிராதபோது அந்த சபையில் குறைந்தது ஒருவரையேனும் வெற்றிடம் நிலவும் அமைச்சு அல்லது திணைக்களம் தவிர்ந்த வேறொரு அமைச்சிலிருந்தோ திணைக்களத்திலிருந்தோ நியமித்தல் வேண்டும்.

(அ) இந்த உரைப்பகுதியின் நோக்கம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஆ) வெற்றிடங்களை நிரப்பும் செயன்முறையின்போது, திணைக்களத் தலைவருக்கும் நியமனத்தை மேற்கொள்ளும் அதிகாரிக்குமிடையே எதிர்மறையான தொடர்பையா உடன்பாடான தொடர்பையா அவதானிக்கக் கூடியதாகவுள்ளது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(இ) எவ்வாறான சந்தர்ப்பத்தில் பதவி வெற்றிடமுள்ள அமைச்சு அல்லது திணைக்களம் அல்லாத வேறொரு அமைச்சிலிருந்தோ திணைக்களத்திலிருந்தோ அதிகாரியொருவரை நியமிக்க வேண்டி ஏற்படும்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஈ) வெற்றிடமாகவுள்ள பதவியை நிரப்புவதற்கு, திணைக்களத் தலைவர், நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரி ஆகியோரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை வெவ்வேறாகத் தருக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

(உ) எவ்வாறான சந்தர்ப்பத்தில் திணைக்கள பதவியொன்றை நிரப்ப வேண்டிய தேவை ஏற்படும்?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(ii) இலங்கை, உயர் மத்தியதர வருமான அந்தஸ்தை நோக்கி நகர்வதனால், உயர் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்கான தயாரிப்புத் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கு புத்தம்புதிய விடயங்களையும் ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திகளையும் வலியுறுத்துவதற்கான தேவை காணப்படுகின்றது. உயர்வடைந்துவரும் கூலிகளின் காரணமாக பொருளாதாரம் தொழிலாளர் செறிவினைக் கொண்ட கைத்தொழில்களில் அதன் போட்டியிடக்கூடிய ஒப்பீட்டு அனுகூலங்களை இழப்பதனால், அக்கைத்தொழில்கள் நடைமுறை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் செறிவுமிக்க தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்கு அப்பால் அறிவினை அடிப்படையாகக் கொண்ட உயர் தொழில்நுட்பவியல் உற்பத்திகளை மேம்படுத்துவது, உயிரியல் தொழில்நுட்ப உற்பத்திகள், மின்னியல் உற்பத்திகள், இலத்திரனியல் உற்பத்திகள், போன்றவற்றை இயலுமைப்படுத்தியதுடன் இவை நாட்டிற்குகூடுதலான வெளிநாட்டுச் செலாவணியை கணிசமாக உருவாக்கக்கூடிய கைத்தொழில் தளத்தினை உயர் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்குப் பன்முகப்படுத்துகிறது. புத்தம்புதிய விடயங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அண்மைய ஆண்டுகளில் ஆராய்சி மற்றும் அபிவிருத்திகளை மேம்படுத்தவதற்காக அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி வருகிறது. அவ்வூக்குவிப்புக்கள் குறைக்கப்பட்ட வருமான வரி வீதங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஏற்பட்ட செலவினத்திற்கான வரிக் குறைப்புக்கள், விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் மற்றும் கருவிகள் மீதான சுங்கத் தீர்வைநீக்கம், ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களுக்கான ஆராய்ச்சிப் படிகள் மற்றும் நிதியிடல்கள் ஆகிய வடிவில் காணப்படுகின்றன. நனோ தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானப் பூங்கா என்பன உருவாக்கப்பட்டமையானது, இவ்வகையுடன் தொடர்பான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான மிக அருமையான வாய்ப்பினை வழங்கியுள்ளது.

(அ) இந்த உரைப் பகுதியின் நோக்கத்தை விளக்குக.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

(ஆ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு அரசினால் அண்மைக் காலத்தில் வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புகள் யாவை?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

[பக் 7 ஐப் பார்க்க.

(இ) மேம்படுத்தப்படவேண்டிய உயர் தொழில்நுட்ப உற்பத்திகளாக இங்கு இனங்காணப்பட்டுள்ள துறைகள் யாவை?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(ஈ) பொருளாதாரத்தில் தொழிலாளர் செறிவினைக் கொண்ட கைத்தொழில்களுக்குரித்தான ஒப்பீட்டு அனுகூலங்கள் இழக்கப்படுவதை தவிர்ப்பதற்கு குறிப்பிடப்படும் உபாயமுறை யாது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(உ) உற்பத்தி தளத்தை அதிக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக பன்முகப்படுத்தப்பட வேண்டிய தேவை யாது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(iii) பொருளாதாரத்தில் விரைந்து வளர்ச்சியடைந்துவரும் துறைகளில் ஒன்றான சுற்றுலாத்துறை 2016 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெறுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளமையினால் தெளிவான சந்தை மேம்பாட்டு உபாயமொன்று அவசியமாகும். மோதல் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் சுற்றுலா வருகைகள் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளமையால் சுற்றுலாக் கைத்தொழில் விரைந்த வளர்ச்சியைக் காட்டுகிறது. எனினும், சுற்றுலாக் கைத்தொழில் மேலும் விரிவடையும் பொழுது பயிற்சி பெற்ற அலுவலர்களின் கூடுதலான தேவை மேம்பட்ட பணியின் நியமங்கள் அதிகரிக்கின்ற அளவின் இயலளவு மற்றும் குறிப்பாக பாரம்பரியமற்ற சந்தைகளில் சிறந்த ஊக்குவிப்பு முயற்சிகள் போன்ற பல சவால்களை இத்தொழில் எதிர்நோக்குகிறது. வளர்ந்துவரும் இத்தொழிற்றுறையின் தேவையை ஈடுசெய்வதற்கு பயிற்சிபெற்ற விருந்தோம்பல் அலுவலர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. எனவே, புதிய பயிற்சி நிலையங்களை நிறுவுவதும் உயர் சான்றிதழ்களைப் பெறுவதற்கு தற்போதுள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதும் பல்தேர்ச்சி அபிவிருத்திகளை வழங்குவதும் வெளிநாடுகளில் தொழில்புரியும் சுற்றுலாவிடுதிப் பணியாளர்கள் நாட்டிற்குத் திரும்பி பணியாற்றுவதற்கு ஊக்குவிப்பதும் அவசிய தேவைகளாகவுள்ளன. இது தேர்ச்சிபெற்ற தொழிலாளர் குழுவினை அதிகரிப்பதுடன் அதன்மூலம் இத்தொழிற்றுறையின் பணி நியமனங்களையும் மேம்படுத்துகின்றது. சுற்றுலாத் துறையில் இடம்பெற்றுவரும் பாரிய செயற்றிட்டங்கள் இலக்கிடப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் தேவைப்பாட்டினை ஈடுசெய்யும் விதத்தில் இத்தொழில்துறையின் இயலளவை உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, உரிய நேரத்தில் இச்செயற்றிட்டங்களை நிறைவுசெய்தல் மிக இன்றியமையாததாகும். இத்துறையின் நிலைபேறான அபிவிருத்திக்கென அரச மற்றும் தனியார் துறைகள் ஒத்துழைப்புடன் செயற்பாட்டை தொடர்சியாகப் பேணுவது இன்றியமையாததாக அமைந்துள்ளது.

[பக் 8 ஐப் பார்க்க.

(அ) சுற்றுலாக் கைத்தொழிலை மேலும் விரிவுபடுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்கள் யாவை?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(ஆ) இலக்கிடப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அளவுகேற்ப சுற்றுலாத் துறையின் இயலளவை அதிகரிக்கத்தக்க வழிமுறை யாது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(இ) பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் அளவை அதிகரிக்கவும் இத்துறை தொடர்பான சேவைகள் வழங்கும் தரத்தினை மேம்படுத்தவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறை யாது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(ஈ) சுற்றுலாத்துறை எதிர்கொள்ள வேண்டிய சவால்களாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(உ) சுற்றுலாக் கைத்தொழிலுக்கு சந்தையை இலக்காகக் கொண்ட தெளிவான உத்திகளைக் கொண்டிருத்தல் அவசியமென இந்த ஆசிரியர் வலியுறுத்துவது ஏன்?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

❊ ❊ ❊